2019 பிப்ரவரி 11] *[திரு. டி. ஜெயக்குமார்]*

பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலை மறியலில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்மீது பதிவு செய்யப்பட்டு, நிலுவையிலுள்ள வழக்குகளின் தன்மையைப் பொறுத்து, நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கொடைக்கானல் நகராட்சி, மறு ஆய்வு முழுமைத் திட்டம் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் இருக்கக்கூடிய கட்டடங்களுக்கு ஒரு முறை கட்டட வரன்முறையையும், புதிய முழுமைத் திட்டத்தினையும் அமல்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. குறிப்பாக, 4-3-1993 ஆம் தேதி முதல் முழுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அந்தத் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கால சூழ்நிலைக்கேற்றவாறு புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு மேலாகியும், அங்கே முழுமைத் திட்டம் நிறைவேற்றப்படாத ஒரு சூழ்நிலையில், குறிப்பாக, பல கட்டடங்கள் விதிமீறல்களுக்கு உட்பட்டிருப்பதாக இன்றைக்கு நீதிமன்றத்தால் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கே வாழுகின்ற கிட்டத்தட்ட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்ற நிலை உருவாகியிருக்கிறது. எனவே, இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்றைக்கு நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நாளைக்கு அது என்னவென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள். (குறுக்கீடு) நாளைக்கு பார்க்கலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லா பிரச்சினைகளையும் ஒரே நேரத்தில் எழுப்ப முடியாது. உட்காருங்கள்.*